தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# வேளாண் பல்கலையில் தொழில் முனைவோருக்கான நிலஎழிலூட்டுதல் மற்றும் மலர் சாகுபடி பயிற்சி நடைபெறுகிறது

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தோட்டக்கலைக் கல்லூரியின் மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறையின் சார்பில் 'நிலஎழிலூட்டுதல் மற்றும் மலர்சாகுபடி' குறித்த பயிற்சி 8-12-2015 முதல் 31-12-2015 வரை 21 நாட்களுக்கு நடைபெறுகிறது. இப்பயிற்சியின் துவக்கவிழா இன்று (8-12-2015) பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

நிலஎழிலூட்டுதல் மற்றும் வணிக மலர் சாகுபடியில் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு நடைபெறும் இப்பயிற்சிக்கு தமிழ்நாடு அரசின் சென்னை தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (Entrepreneurship Development Institute) நிதியுதவி வழங்குகிறது.

இப்பயிற்சியை கோவை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. A. இராமகிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இப்பயிற்சியில் பங்குபெற்ற சுமார் முப்பது தொழில் முனைவோர் தங்களை அறிமுகம் செய்த பிறகு மலரியல் மற்றும் நிலஎழிலூட்டும் துறைத்தலைவர் முனைவர். மா. கண்ணன் அவர்கள் மூன்று வாரங்களில் மேற்கொள்ளப்படவுள்ள பயிற்சி குறித்து சுருக்கமாக எடுத்துரைத்தார்.

அழகுச் செடிகளுக்கான நாற்றுகள் உற்பத்தி, மல்லிகை, செண்டுமல்லி, வாசனை ரோஜா, கொய்மலர் ரோஜா, சம்பங்கி, கிளாடியோலஸ், ஆந்தூரியம், ஆர்கிட்ஸ், செவ்வந்தி மற்றும் ஜெர்பரா மலர்களின் சாகுபடி தொழில் நுட்பங்கள், பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,

நில எழிலூட்டுதலின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வகைப்பாடுகள், தோட்டத்தின் உறுப்புகள், புல்தரை அமைப்பு மற்றும் பராமரிப்பு, மலரியல் மற்றும் எழிலூட்டுதலில் இயந்திரமயமாக்கம், உலர் மலர் உற்பத்தி, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, மதிப்பு கூட்டுதல் ஆகியவை பற்றிய பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

மேலும் தனியார் நாற்றுப் பண்ணைகளுக்கும் அரசு மற்றும் தனியார் நிறுனவனங்களில் அமைக்கப்பட்டுள்ள நிலஎழிலூட்டும் பிரிவுகளுக்கும் தொழில் முனைவோர்கள் அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்படவுள்ளனர். இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் தொழில்முனைவோர், தொழில் தொடங்க ஏதுவாக வங்கிகள் உள்ளிட்ட அரசு நிதியுதவி நிறுவனங்களை அணுகி கடனுதவி பெற திட்டங்களை தயாரிப்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் நிறைவில் பங்கேற்பு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

முன்னதாக கோயம்புத்தூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர் சே. மாரியப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மலரியல் துறை உதவி பேராசிரியர் முனைவர். ம. கங்கா அவர்கள் நன்றியுரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்

